NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 18 December 2020

# ஆய்வு: பொய்ச் செய்தியை 10ல் ஆறு பேர் நம்பிவிட்டனர்

சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தர வாசிகளில் 10 பேரில் ஏறக்குறைய 6 பேர் தாங்கள் குறுஞ்செய்தி அல்லது படங்கள் வடிவில் தவறான தகவல்களைச் சந்தித்து இருப்ப தாக அல்லது அவற்றை நம்பி இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஓர் ஆய்வு இவ்வாறு தெரிவிக்கிறது. வயது, சமூகப் பொருளியல் அந்தஸ்து, கல்வி நிலை எப்படி இருந்தாலும் யாரை யும் தவறான தகவல்கள் சென் டைந்து விடுகின்றன என்பது அந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

ஆய்வில் 2,000 பேர் உள்ளடக் கப்பட்டனர். ஆய்வின் ஒரு பகுதி யாக, சோடிக்கப்பட்ட ஒரு செய்தி அவர்களிடம் காட்டப்பட்டது. மூன் றில் இரு பங்கினர் உண்மை என்று அந்தச் செய்தியை நம்பிவிட்டனர்.

சிங்கப்பூரர்களிடையே மின்னி லக்கமயம் மற்றும் தகவல் அறிவு பொதுவாக குறைவாக இருக்கிறது என்றும் அந்த ஆய்வு குறிப்பிடு கிறது. ஆய்வின் இரண்டாம், மூன் றாம் கட்டங்கள் இன்னமும் நடந்து வருகின்றன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.